## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** 15-03-2026, ஞாயிற்று கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12-03-2026.

## குற்ற வழக்குத் தொடர்வுத் துறை சார்பில்

# அரசு உதவி வழக்குரைஞர் - நிலை - 2 பணிக்கான பணி நியமன ஆணைகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 13 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்குரைஞர் நிலை - 2 பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 45 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் உள்ள அரசு உதவி வழக்குரைஞர் நிலை - 2 வழக்குரைஞர்கள், குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்துவர். அத்துடன் அவர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு அரசுத் துறைகளில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிவர்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அரசு உதவி வழக்குரைஞர் நிலை2ல் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் நிலை தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு பின் அப்பணியிடத்திற்கு 45 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 45 நபர்களுக்கு அரசு உதவி வழக்குரைஞர் நிலை2 பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநர் ஜி.கிருஷ்ண ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கால்நடை பராமரிப்புத் துறையில்

# 292 கால்நடை உதவி மருத்துவர்களுக்கான பணி நியமன ஆணைகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக கால்நடை பராமரிப்புத் துறையில், கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 292 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்கு வகித்து வரும் கால்நடைகளை நன்கு பராமரிப்பதற்காகவும், மேம்பட்ட தரமான மருத்துவச் சிகிச்சைகளை கால்நடைகளுக்கு அளித்திடவும், பல்வேறு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தமிழ்நாடு அரசு சிறப்பான முறையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை பராமரிப்புத் துறையில், கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களுக்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 292 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்குவதன் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 7 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசால் இந்த ஐந்து ஆண்டு காலத்தில் கால்நடை பராமரிப்புத்துறையில் 3297 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் ந.சுப்பையன், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் சா.ப. அம்ரித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் ரூ.10 லட்சத்தில் வ.உ.சி. பூங்கா!

### அமைச்சர் இ.பெரியசாமி அடிக்கல் நாட்டினார்!

*திண்டுக்கல், மார்ச்.13 -*

*திண்டுக்கல்லில் ரூ.10 லட் சத்தில் வ.உ.சி. பூங்கா அமைப்பதற்கான பணி நடைபெற்றது. இதில் அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.*

*திண்டுக்கல்லில் வ.உ.சி. சிலை அமைந்துள்ளது. இந்த சிலையின் அருகில் மாநகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.பத்து லட்சத்தில் வ.உ.சி. பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து பூங்கா அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.*

*மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமை வகித்தார். மாநகராட்சி மேயர் இளமதி, துணை மேயர் ராஜப்பா.மாநகராட்சி ஆணையர் செந்தில் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக ஊரக வளர்ச்சிதுறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு, பூங்கா அமைய உள்ள இடத்தில் மரக்கன்று நட்டு வைத்தார்.*

*பின்னர் வ.உ.சி. சிலைக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினார். தொடர்ந்து வ.உ.சி. பூங்காவுக் கான பூமி பூஜையில் அமைச் சர் இ.பெரியசாமி பங்கேற்று அடிக்கல் நாட்டி வைத்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:*

*கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் வரலாற்றை வருங்கால சந்ததியினர், இளைஞர்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். நமது நாடு சுதந்திரக் காற்றை சுவாசிப்ப தற்காக வ.உ.சி. செய்த தியா கங்களை கணக்கிட்டு பார்க்க முடியாது. சிறையில் செக்கி ழுத்தார். பல கொடுமைகளுக்கு ஆளானார். ஆனால் எதற்கும் அவர் அஞ்சவில்லை.*

*நாங்கள் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்று இருக்கிறோம். நான் கூட 7 மாதங்கள் சிறையில் இருந்திருக்கிறேன். எனக்கும் சிறை வாசம் என்றால் என்னவென்று தெரியும். அதன் சிரமங்களை சிறையில் இருந்தால் தான் நாம் அறிந்து கொள்ள முடியும். மேலும் சிறைச்சாலை நமது அறிவை வளர்க்கும் பட்டறையாக இருக்கும்.*

*எனவே வ.உ.சி.யின் தியாகங்களை மக்களுக்கு உணர்த்தும் வகையில் தான் அவருடைய சிலை அருகிலேயே பூங்கா அமைக்கப் பட உள்ளது. இந்த பூங்காவுக்கு வருபவர்கள் வ.உ.சி. சிலையை காண்பார்கள். அப்போது இங்கு வைக்கப் பட்டிருக்கும் அவருடைய வரலாற்றை படித்து தெரிந்துகொள்வார்கள். அது அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும். இவ்வாறு அவர் பேசினார். இதில், தி.மு.க. கிழக்கு,*

*மாவட்டச் செயலாளர் இ. செந்தில்குமார் காந்திராஜன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகர பொருளாளர் சரவணன், தொழில் அதிபர் ரகுராம் , விவசாய அணி அமைப்பாளர் இல. கண்ணன், மாநகரப் பொருளாளர் மீடியோ சரவணன், கவுன்சிலர் ஜானகிராமன், முருகானந்தம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.*

# தி.மு.க. கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.03.2026

# தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வரும் திருமதி. **ஜெ. வீரமணி** அவர்கள் **கழக மாணவர் அணிச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.03.2026

## ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை வாரிச்சுருட்டிய ஒரு

# பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்து பேசுவதா?

ஒரு நாட்டின் பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்த பேச்சை பேச முடியுமா? இந்த கேள்வியைத்தான் மோடியின் திருச்சி பேச்சு எழுப்புகிற கேள்வி தமிழ்நாட்டு மக்கள் பணத்தின் ஏ.டி. எம். ஒரு குடும்பத்தின் கையில் இருக்கிறது என்று எப்படி ஒரு பிரதமரால் பேச முடிகிறது?

இப்படி ஒரு உளறலுக்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இதற்கு பதில் வேண்டுமா? ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை சட்ட விரோதமாக பல்லாயிரம் கோடிகளில் வாரி சுருட்டி நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளானவர் இந்த உத்தமர் மோடி!

தேர்தல் பத்திரம் என்ற ஒன்றை கொண்டு வந்தாரே நினைவிருக்கிறதா?

கருப்புப் பணத்தை பாரத ஸ்டேட் வங்கி வழியாக வெள்ளையாக்கி தன்னுடைய பெயரால் உருவான அறக்கட்டளையில் கொட்டச் சொன்னவரே இந்த மோடி தான்! நிதியை வழங்குங்கள் உங்கள் பெயர்களை மறைத்து வைத்திருக்கிறோம் என்று சொல்லியவரும் இவர்தான்!

அனைத்துக் கட்சிகளுக்கும் வழங்கலாம் என்று பெயரளவில் சொல்லிக் கொண்டு பெரும்பகுதி நிதியை சுருட்டிக் கொண்டது பா.ஜ.க. 2019 இல் இருந்து 2024 வரை இவர்கள் சுருட்டிய தொகை, ரூ.8250 கோடி உச்ச நீதிமன்றம் தலையிட்டு இந்த நிதி சுருட்டல் சட்டவிரோதமானது என்று மோடியின் மண்டையில் ஓங்கி குட்டியது.

நிதி அளித்தவர் பட்டியலை வெளியிட பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டது.

மோடி மோசடிக்கு உடந்தையாக இருந்த அந்த வங்கிப் பட்டியலை வெளியிட மாத கணக்கில் தவணை கேட்டது!

உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை; அடுத்த சில நாட்களிலேயே வெளியிட வேண்டும் என்று ஆணையிட்டது!

அப்போதும் கூட நன்கொடையாளர்களின் பெயர்களை கண்டுபிடித்து விட முடியாமல் மூடி மறைக்கும் பட்டியலை வெளியிட்டது. மீண்டும் உச்ச நீதிமன்றம் தெளிவான பட்டியலை வெளியிட உத்தரவிட்டது இவை யெல்லாம் வங்கியின் முடிவுகள் அல்ல ;மேலிருந்து மோடி நிதி மோசடியை காப்பாற்ற அரசு எந்திரங்கள் நடத்திய திருவிளையாடல்!

பெயர் பட்டியல் வெளியான பிறகு பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. மோடி பெயரிலான அமைப்புக்கு நன்கொடை வாரி வழங்குகிறவர்களுக்கு வரிச் சலுகைகள் காண்ட்ராக்ட் என்று வாரி வழங்கப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் இப்போதும் இணையத்தில் இருக்கின்றன.

ஊழலை சட்டமாக்கி உச்சநீதி மன்றத்தால் கண்டிக்கப்பட்டவர் தான் இப்போது ஏ.டி.எம். பற்றி இங்கே வந்து காதில் பூசுற்றுகிறார்.

தி.மு.க.வினர் 8 வயது குழந்தையை யும் விட மாட்டார்கள் என்ற மோடியின் பேச்சை மக்கள் நிச்சயம் வெறுக்கவே செய்வார்கள். குழந்தைகளை அரசியலுக்காக பாலுறவுக்குப் பயன்படுத்திய ‘எப்ஸ்டின் ஃ பைலில்’ மோடியின் பெயரும் இடம்பெற்று இருப்பதாக கூறுகிறார்கள்.

அந்த நினைவில் இருந்து இன்னும் மோடி விடுபடவில்லை போலும். சொல்லப்போனால் தொலைக்காட்சி விவாதங்களில் ஈடுபடும் பா.ஜ.க. பேச்சாளர்கள் கூட இப்படி பேசுவதற்கு கூசுவார்கள்.

இதுதான் அவரது ஆன்மீகக் கதை.



**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர்



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் படப்பை ஊராட்சி திமுக சார்பில் மார்ச் 1 கழகத் தலைவர் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழா மற்றும் பொங்கல் விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை.அ. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறு_ குறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை ஆற்றி பரிசுகளை வழங்கினார். கூட்டத்தில் ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் திருமுடிவாக்கம் மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.வந்தேமாதரம்,படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன், இளம் பேச்சாளர்கள் வடக்குப்பட்டு ச. பேரரசன் , ஸ்ரீலேகா குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். க.பா. ஆடலரசு ஏ.டி.எம். வினோத் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்குப் பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு ”மனிதநேய விழா–38அ, எல்லாம் தருவது தமிழ்நாடே! எல்லா மக்களும் நம் உறவே! எனும் தலைப்பில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமையில் வெளிநாடு வாழ் தமிழ் தலைவர்களின் வாழ்த்தரங்கத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தும், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர், மேனாள் மனிதவள அமைச்சர், மலேசியா துணைத்தலைவர், மலேசிய இந்தியக் காங்கிரஸ் – டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன், தலைவர், இலங்கை, தொழிலாளர் காங்கிரஸ் மேனாள் முதல் அமைச்சர் / இலங்கை மேனாள் ஆளுநர் – செந்தில் தொண்டமான், தலைவர் – சுவீஸ் தமிழ் இலக்கிய சங்கம், (கல்லாறு சதீஷ்), முனைவர். நாகேஸ்வரன் அருள் ராசா ஆகியோர் வாழ்த்துரைத்தனர்.